**வாசிகசாலை**
**ஆண்டறிக்கை 2020/2021**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | வாசிகசாலை செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0079 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் 2020 - மார்கழி 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நடு குழுமம், சுதர்சன் சிறினிவாசன் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 62,979.50<br>2021 - LKR 144,245.00 |

நூலக நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளின் ஒரு பகுதியாகச் சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகளை உடனுக்குடன் ஆவணப்படுத்தும் செயற்றிட்டம் ''வாசிகசாலை'' ஆகும். அதாவது ஒரு வாசிகசாலைக்குச் சென்று சமகால வெளியீடுகளை வாசிக்கும் அனுபவத்தினை வழங்கும் வகையில் இச்செயற்றிட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளியீட்டாளர்களின் விற்பனையினை பாதிக்காத முறையில் இங்கே வெளியிடப்படுகின்றன. அத்துடன் குறித்த சஞ்சிகைகள், பத்திரிகைகளின் பழைய இதழ்களையும் முழுமையாக ஆவணப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஈழத்திலும் புலத்திலும் வெளியாகும் தமிழ் பேசும் சமூகங்களில் இதழ்கள் இச்செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

செயற்றிட்ட நோக்கம்

- தமிழ் பேசும் சமூகங்களில் இருந்து சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்ற பத்திரிகைகள் மற்றும் சஞ்சிககளை குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளியீட்டாளர்களுக்கு விற்பனை யினை பாதிக்காத முறையில் அவர்களிடம் அனுமதி பெற்று அவற்றை எண்ணிமப்படுத்தி அல்லது எண்ணிம கோப்புக்களை (PDF) சேகரித்தல்
- ஆவணங்களுக்கான அனுமதி பெறல்
- புதிய வெளியீடுகள் ஆவணங்களை இனங்காணுதல்
- இச்செயற்றிட்டம் ஊடாக எதிர்காலத்தில் ஒரு சேகரித்தின் பழைய ஆவணங்களை தேடல் என்ற நிலைப்பாட்டினை முழுமையாக குறைப்பதனை நோக்கமாகக் கொண்டே முன்மொழியப்பட்டது.

இச்செயற்றிட்டம் 2020 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மொத்தமாக 2020இல் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் உள்ளடங்களாக 995 ஆவணங்கள் 7234 பக்கங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

| | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆகஸ்ட் | 62 | PDF |
| 2 | செப்டம்பர் | 167 | 3,042 +PDF |
| 3 | ஒக்டோபர் | 189 | 4036 +PDF |
| 4 | நவம்பர் | 265 | PDF |
| 5 | டிசம்பர் | 312 | 156 +PDF |
| | மொத்தம் | 995 | 7234 |

மொத்தமாக 2021 இல் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் உள்ளடங்களாக 2134 ஆவணங்கள் 17522 பக்கங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஜனவரி | 228 | 1320 |
| பெ ப்ரவரி | 361 | 1496 |
| மார்ச் | 179 | 782 |
| ஏப்ரல் | 212 | 978 |
| மே | 109 | 268 |
| யூன் | 190 | 504 |
| யூலை | -- | |
| ஆகஸ்ட் | 133 | 1727 |
| செப்டம்பர் | 242 | 3014 |
| ஒக்டோபர் | 179 | 2480 |
| நவம்பர் | 147 | 1979 |
| டிசம்பர் | 154 | 2974 |
| மொத்தம் | 2134 | 17522 |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.

- நூலக நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்கள் எண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு ஆவணங்களையே எண்ணிமப்படுத்த முடிந்தமை.புதிய பணியாளர் பயிற்சிகள் அவை சார்ந்த விடயங்கள்.
- ஆவணங்களுக்கான அனுமதி பெறுவதில் ஆவணங்களை மென்கோப்பு வடிவில் பெறுவதில் சில இடர்பாடுகள் காணப்பட்டன.
- குறிப்பாக திட்டமிடப்பட்ட ஆவணப்பட்டியல் தவிந்த வேறு ஆவணங்கள் இனங்காணப்பட்டமை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஆவணங்களுக்கான அனுமதி பெறல் ஆவணங்களை மென்கோப்பு வடிவில் பெறுதல் ஆகியவற்றிகான திட்டங்களை உருவாக்கல். அதற்கான இலக்கிய வட்ட குழுவொன்றை நிறுவனத்துள் உருவாக்குதல் அவசியம்.
- நாளாந்த வெளியீடுகள் அல்லது பத்திரிகைகளின் தொடர்ச்சிகள் தொடர்பாக வெளியீட்டாளர்களுடன் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்தல்.
- புதிய ஆவணங்களை இனங்காணுதல் தொடர்பாக ஊழியர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- நிதி தொடர்பான விடயங்கள் பெரும் சவாலாக அமைந்தது. அதற்கான புதிய பங்காளர்களை கண்டடைதல்.
- தன்னார்வலர்களை இணைத்து திட்டங்களை உருவாக்கி சேகரிப்பை மேம்படுத்தல்.

பின்னிணைப்பு

வாசிகசாலை